டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 155 29.11.2025 SATURDAY KARTHIGAI : 12 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 155 29.11.2025 சனிக்கிழமை கார்த்திகை : 12 விலை : ரூ.5/–

3 இனி பாஜகவை நம்பி புண்ணியமில்லை ஆளுக்கொரு முடிவில் அதிமுக முன்னோடிகள்

4 திருச்சி மாவட்ட தொமுச பேரவை தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

2 'டித்வா' புயல் எச்சரிக்கை: திமுக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்க முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

# ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்ட பல்கலையில் எந்த பாகுபாடும் காட்டவில்லை: முதல்வர் ஸ்டாலின்

சென்னை: நவ.29-

''ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்ட இந்த பல்கலைக்கழகத்தில் நாங்கள் எந்த பாகுபாடும் காட்டவில்லை. இந்த பட்டமளிப்பு விழாவை கூட நாங்கள் புறக்கணிக்கவும் இல்லை,'' என, முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த, தமிழ்நாடு ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலை பட்டமளிப்பு விழாவில், மாணவர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் பட்டங்களை வழங்கி கவுரவித்தார். நடிகர் சிவகுமாருக்கு வாழ்நாள் சாதனைக்காக மதிப்புறு முனைவர் பட்டத்தை முதல்வர் ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார். நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

பட்டமளிப்பு விழாவிற்கு முதல்வராக, பல்கலை வேந்தராக மட்டுமல்ல, கலைஞன் என்ற முறையில் வந்துள்ளேன். நடிகர் சிவகுமார், ஓவியர் சந்துருவுக்கு மதிப்புறு முனைவர் பட்டங்களை வழங்கியதில் பெருமை அடைகிறேன். சிவகுமாருக்கு டாக்டர் பட்டம் மிகவும் பொருத்தமான ஒன்று. சிவக்குமார் புகழ்பெற்ற நடிகர் மட்டுமல்ல, நல்ல ஓவியர். சிறந்த சொற்பொழிவாளர். கருணாநிதிக்கு நெருக்கமானவர்.



புறக்கணிக்கவில்லை

ஜெயலலிதா பெயர் சூட்டப்பட்ட இந்த பல்கலைக்கழகத்தில் நாங்கள் எந்த பாகுபாடும் காட்டவில்லை. இந்த பட்டமளிப்பு விழாவை கூட நாங்கள் புறக்கணிக்கவும் இல்லை. 2021ம் ஆண்டிற்கு இந்த பல்கலையை செழிப்பாக வளர்த்து இருக்கிறோம். இதுதான் நான் நிறுவ நினைக்கும் அரசியல் மாண்பு; இந்த மாண்பு தொடர வேண்டும். 2021ம் ஆண்டுக்கு பிறகு இந்த பல்கலை.,யில் நிறைய மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள்.

ரூ.5 கோடி

புதிய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்து, அதிக நிதியை ஒதுக்கி, ஆராய்ச்சி மையம் உட்பட பல அமைப்புகளை உருவாக்க நிதி வழங்கினோம். ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில் ஊதியம் மற்றும் நிர்வாக செலவிற்கான மானியத்தொகை ரூ.3 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக உயர்த்தப்படும்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டம் வளையங்குளத்தில் கிராமிய கலை பயிற்சி பள்ளி அமைக்க அரசின் சார்பில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். ஏஐ மூலம் பலரும் பாடல்கள், இசைகள், ஓவியங்கள் என உருவாக்குகின்றனர். அதனால் நமக்கான வாய்ப்புகள் குறைந்துவிடும் என்று நீங்கள் யாரும் கவலைப்படக் கூடாது.

தொழில்நுட்பம்

எவ்வளவு தான் தொழில்நுட்பம் வளர்ந்தாலும், அதுவால் மனிதர்களின் சிந்தனைகளை வெல்ல முடியாது. தொழில்நுட்பத்தை நம்முடைய பலத்திற்கு நாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

வித்தை தெரிந்தவர்களிடம் இருந்தால் தான் ஆயுதங்களுக்கே மதிப்பு. ஏஐ தொடர்பான கோர்ஸ்களை கற்றுக்கொள்ளுங்கள். இளைஞர்கள் அதிகம் போன் பார்க்கிறார்கள். சிலர் போதைப்பொருட்களை பயன்படுத்துகிறார்கள். இதுக்கு எல்லாம் கலைகள் மூலம் தீர்வு கொண்டு வர வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.



■ திண்டுக்கல் மாநகராட்சி அங்கு விலாஸ் ரோட்டில், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய்.10 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்கு திறப்பு விழா நடைபெற்றது. இதில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் துணை மேயர் ராஜப்பா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்




■ திண்டுக்கல் மாநகரம் பகுதி 1க்கு உட்பட்ட இரண்டாவது வார்டில், மாநகராட்சி நிதியில் கட்டப்பட்ட மாநகராட்சி துவக்கப்பள்ளியையும் அங்கன்வாடி மையத்தையும் திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம், திண்டுக்கல் மாநகர மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் துணை மேயர் ராஜப்பா ஆகியோர் திறந்து வைத்தனர்




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி (இந்தியன் வங்கி) அனைத்து வங்கிகளுடன் இணைந்து நடத்தும் மாபெரும் சிறப்பு கல்விக் கடன் முகாமில் 46 மாணவர்களுக்கு ரூ.1.58 கோடி மதிப்பிலான கல்வி கடன் உதவிக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் திருமதி.க.சிவசௌந்திரவல்லி வழங்கினார். உடன் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.இராஜன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

# திருப்பூரில் திமுக வடக்கு மாநகர பகுதி கழகம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா

திருப்பூர், நவ.29-

திருப்பூர் வடக்கு மாவட்ட திமுக வடக்கு மாநகரம் பாண்டியன் நகர் பகுதி கழகம் சார்பில் தமிழக துணை முதலமைச்சர் திமுக கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் வாவிபாளையம் அருகே உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளி. வாவிபாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பாண்டிய நகர் பகுதி கழகச் செயலாளர் ஜோதி தலைமையிலும் 5 வது வட்டக் கழக செயலாளர் பாப்பு சாமி இளைஞரணி எஸ் எஸ் ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது மேலும் 25க்கும் மேற்பட்ட மாமரக்கன்று.



கொய்யா கன்று. புங்க மர கன்று வேப்ப மரக்கன்று உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது இந்த நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி வேலுச்சாமி. மாநகர சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் குமார். மாவட்ட ஆதிதிராவிடர் அணி பண்ணாரி. கலை இலக்கிய பேரவை தலைவர் மகேஷ். துணை அமைப்பாளர் கருப்பசாமி. பகுதி வர்த்தக அணி சுரேந்தர். பகுதி திமுக சம்பத்குமார். முருகன். ஜீவானந்தம். பி எல் எ டு பன்னீர் செல்வம். விஜய் எ நாச்சிமுத்து. சண்முக பிரியா. பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் வெங்கடேஷ். சையத் அலி.இளைஞர் அணி நிர்வாகிகள் கிஷோர் குமார். குமரவேல் ராஜன்.விஜய். மணிகண்டன். பூக்கடை சபரிநாதன். பிரவீன் குமார். தினேஷ்.மற்றும் பலர் பங்கேற்றனர்...

# தமிழகம் முழுவதும் காங் மாவட்ட நிர்வாகிகள் மாற்றம்; மேலிட பொறுப்பாளர் தகவல்

தேனி, நவ.29.-

தமிழகம் முழுவதும் காங்கிரசில் அமைப்பு சீரமைப்பு இயக்கம் நடத்தி மாவட்ட தலைவர் உட்பட நிர்வாகிகள் மாற்றம் செய்ய உள்ளதாக தேனியில் அக்கட்சியின் மாவட்ட மேலிட பொறுப்பாளர் அகமத்துல்லா குசைனி தெரிவித்தார்.

தேனி பழனிசெட்டிபட்டியில் காங்., ஆலோசனைக்கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். நிருபர்களிடம் மேலிட பொறுப்பாளர் அகமத்துல்லா குசைனி கூறியதாவது:



ராகுல் அறிவுறுத்தலில் மாவட்டந்தோறும் காங்., சார்பில் அமைப்பு சீரமைப்பு இயக்கம் நடத்தி வருகிறோம். இது தொடர்பாக நிர்வாகிகளுடன் ஆலோசித்துள்ளோம். அனைத்து மாவட்டங்களிலும் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மாற்றம் செய்வது குறித்து கருத்து கேட்டு வருகிறோம்.

அனைவருக்கும் விண்ணப்பம் வழங்கி பரிசீலிக்கப்பட்டு மாவட்டத்திற்கு 10 பேர் தேர்வு செய்து அதனை அகில இந்திய தலைமைக்கு அனுப்ப உள்ளோம். இப்பணியை டிச., 5க்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம். சிபாரிசு, பரிந்துரைக்கு இடமின்றி நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள். மாவட்டத்தில் 4 நாட்கள் தங்கி அனைத்து தொகுதிக்கும் செல்ல உள்ளேன். அங்குள்ள மூத்த நிர்வாகிகளிடம் ஆலோசனைகள், கருத்துக்கள் கேட்க உள்ளேன். அனைத்து மாவட்டங்களிலும் இந்த பணி நடக்கிறது என்றார்.



# சனிபகவான் கோவிலில் அன்னதான, தட்டுக்காசு உண்டியல் எண்ணும் பணி

தேனி. நவ.29

தேனி மாவட்டம்,சின்னமனூர் அருகே குச்சனூர் சுரபி நதிக்கரையில் அருள்பாலிக்கும் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் அன்னதான உண்டியல் மற்றும் தட்டுக்காசு உண்டியல் என்னும் பணி நடைபெற்றது.இங்கு சுயம்புவாய் சனீ ஸ்வர பகவான் எழுந்தருளி உள்ளார் .மூலவருக்கு அருகில் உற்சவமூர்த்தி அமைந்துள்ளார் .சனீஸ்வரர் ஈஸ்வர பட்டம் பெற்றவர் என்பதால் கிரீடத்தில் விபூதிப் பட்டை அணிந்து உள்ளார்.நீதிமானாக திகழும் சனீஸ்வர பகவான் ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையில் அவரவர் வினைக்கேற்ப பலன்களை அளிப்பதால் பக்தர்கள் மிகுந்த பயபக்தியுடன் வழிபாடு செய்கின்றனர்.சிறப்புகள் பல பெற்ற குச்சனூர் சனி பகவான் திருக்கோயிலில் நடைபெற்ற அன்னதான உண்டியல் மற்றும் தட்டுக்காசு உண்டியல் எண்ணும் பணியினை இந்து சமய அறநிலைத்துறை ஆய்வர் கிருபாதேவி,கோவில் செயல் அலுவலர் ஜெயராமன் ஆய்வு மேற்கொண்டனர். ..

# பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்றார் புடின்: 4 ஆண்டுகள் கழித்து டிச.45ல் இந்தியாவில் சுற்றுப்பயணம்



புதுடில்லி, நவ.29.- பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் புடின் டிசம்பர் 45 தேதிகளில் இந்தியா வருகிறார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்திய ரஷ்யா ஆண்டு உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் டில்லி வருவதாக வெளியுறவு அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி உள்ளதாவது; ரஷ்ய அதிபர் புடினின் அரசு முறைப் பயணம், இந்திய மற்றும் ரஷ்யாவின் இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை மேம்படுத்தவும், வலுப்படுத்துவதற்கான தொலைநோக்கு பார்வையை உறுதிப்படுத்தவும், உலகளாவிய பிரச்னைகள் குறித்து பரஸ்பரம் கருத்துகளை பரிமாறி கொள்ள வாய்ப்பை வழங்கும்.

இவ்வாறு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022ம் ஆண்டு பிப்ரவரியில் ரஷ்யா உக்ரைன் போர் தொடங்கிய பின்னர் தற்போது தான் அதிபர் புடின் இந்தியா வருகிறார். மேலும், இந்த பயணத்தின் போது உச்சி மாநாட்டில் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது. கடைசியாக 2021ம் ஆண்டு இந்தியாவுக்கு ரஷ்ய அதிபர் புடின் பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'டித்வா' புயல் எச்சரிக்கை: திமுக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்க முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை. நவ.29.- காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த திமுக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் 'டித்வா' புயல் காரணமாக கனமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட தயார் நிலையில் இருக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கடந்த இரண்டு நாட்களாக பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளுடன் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வந்த நிலையில் 'டித்வா' புயல் எதிர்கொள்ள அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டுள்ளதோடு, மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது என்றாலும், ஒருவேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களைத் தயார் நிலையில் இருக்கும்படி காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், பொதுமக்கள் தன்னார்வலர்களுடன் இணைந்து பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம். குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து தரவும், ஆங்காங்கே நடைபெறும் மீட்புப் பணிகளிலும் உதவிடவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தை எதிர்கொள்ளவும் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையிலும் கழகம் களத்தில் முழுமூச்சுடன் துணையாக நிற்க வேண்டும் என கட்சியினரை, நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# எம்ஜிஆர் வழியில் விஜய் தனது பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்" செங்கோட்டையன்



சென்னை. நவ.29.- "எம்ஜிஆர் வழியில் விஜய் தனது பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்" என தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய செங்கோட்டையன்: மக்கள் சக்தியுடன் 2026ல் ஆட்சிப் பீடத்தில் விஜய் அமரும் வாய்ப்பு உருவாகலாம். புதியவர்கள் ஆள வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே எழுந்துள்ளது. ஆட்சி மாற்றம் நிகழ விஜய்க்கு உதவுவேன்.

அதிமுகவில் இருந்து மேலும் சிலர் வருவது குறித்து இப்போதைக்கு தெரிவிக்க முடியாது. சொன்னால் பிரச்சினை வரும். ஆட்சி மாற்றத்தை உருவாக்கி விஜய் தலைமையில் தமிழகம் வெற்றிநடை போடுவதற்கு அயராது உழைப்பேன்" என்றார்.

மேலும் பேசிய அவர், "எம்ஜிஆர் இயக்கத்தை துவங்குகிறபோது, இது திரைப்படத்தைப் போல நூறு நாட்கள் தான் ஓடும் என சொன்னார்கள். ஆனால் அவருடைய ஆட்சியை இறுதிவரை யாராலும் வெல்ல முடியவில்லை. வரலாறு படைத்த ஒரு தலைவர்.

எம்ஜிஆர் வழியில் விஜய் தனது பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். எம்ஜிஆர் மற்றும் அண்ணாவின் திருவுருவம் தாங்கிய வாகனத்தில் தான் விஜய் சென்று கொண்டிருக்கிறார். எம்ஜிஆர் எவ்வழியில் பயணம் செய்தாரோ, அதே வழியில் இவரும் பயணம் மேற்கொண்டிருக்கிறார்" இவ்வாறு அவர் பேசினார்.

# வரும் தேர்தலில் எங்களுக்கு யாரும் போட்டி இல்லை சீமான் நம்பிக்கை



காரைக்குடி, நவ.29.- வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் எங்களுக்கு யாரும் போட்டி இல்லை என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து காரைக்குடியில் நடைபெற்ற மாவீரன் தின மாநாட்டில் அவர் பேசியதாவது: தமிழர்களை தலைகுனிய விடமாட்டோம் என்று சொல்லும் அளவுக்கு ஆகிவிட்டது. குடித்து குடித்தே குனிந்தவர்கள் இனி எப்படி தலை நிமிர போகின்றனர்.

பக்கத்தில் சென்று பார்ப்பதற்கு வாய்ப்பு கொடுத்து கூட நெரிசலில் இறந்தால் பரவாயில்லை என்கின்றனர். மரங்கள், மாடுகள் மாநாடு என்றால் சிரிக்கின்றனர். கள்ளச்சாராயம் குடித்து இறந்தால் ரூ.10 லட்சம், கூத்தாடியை (நடிகரை) பார்க்கப்போய் இறந்தால் ரூ.10 லட்சம்.

மீனவர்கள் கொலை செய்யப்பட்டால் ஒரு ரூபாய்கூட அறிவிப்பதில்லை. குடும்பத் தலைவிக்கு ரூ.1,000, கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1,000, தேர்தல் நெருங்குவதால் பொங்கலுக்கு வேட்டி சேலை, ரூ.3,000 முதல் ரூ.5,000 வரை அறிவிக்க உள்ளனர்.

இலவசம் வாங்கும் நிலையில்தான் தமிழ் மக்கள் உள்ளனர். நாம் தமிழர் கட்சி மட்டுமே 234 தொகுதிகளிலும் தனித்து நிற்கிறது. கூட்டணி இல்லாமல் தனித்து போட்டியிடுவோம் என்று வேறு எந்த கட்சியாவது அறிவிக்க முடியுமா? நாம் தமிழர் கட்சிதான் பெரிய கட்சி.

2026 தேர்தலில் எங்களுக்கு யாரும் போட்டி இல்லை. 2026 தேர்தலுக்கு பிறகு பிரபாகரன் பெயரை அனைவரையும் உச்சரிக்க வைப்பேன். இனி இன விடுதலை ஒன்றுதான் தீர்வு. இவ்வாறு அவர் பேசினார்.



# பிரதமருக்கு கொலை மிரட்டல்; திமுக நிர்வாகியை கைது செய்ய பாஜ வலியுறுத்தல்


சென்னை, நவ.29.- பிரதமருக்கு கொலை மிரட்டல் விடுத்த திமுக நிர்வாகியை கைது செய்ய வேண்டும் தமிழக பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கை; தென்காசியில் திமுக சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில், பிரதமர் மோடிக்கு திமுக தெற்கு மாவட்டச் செயலாளர் ஜெயபாலன் கொலை மிரட்டல் விடுத்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது.

நாட்டின் அதிமுக்கிய பொறுப்பில் இருக்கும் ஒரு தலைவரை, அதிலும், உலகமே போற்றும் மாபெரும் தலைவரைக் குறித்து எந்தவொரு மரியாதையுமின்றி, மேடை நாகரிகமுமின்றி கொலை மிரட்டல் விடுத்திருப்பது தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருக்கிறதா எனும் சந்தேகத்தை எழுப்புகிறது. அதிலும், உடனிருந்த தென்காசி எம்பி ராணி ஸ்ரீகுமாரும், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜாவும் மாவட்டச் செயலாளரின் கொடூரப் பேச்சைத் தடுக்காமல் மௌனம் காத்திருப்பது ஒட்டுமொத்த திமுகவினரின் வன்முறை போக்கையும் வன்மத்தையும் வெளிப்படுத்துகிறது. இதைத் தட்டிக் கழிக்க எத்தகைய சாக்குபோக்கை திமுக கூறினாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

நமது பாரதப் பிரதமர் தமிழகத்திற்கு வரும் வேளையில், அவரது பாதுகாப்பை அச்சுறுத்தும் வகையில் பேசியுள்ள திமுக தெற்கு மாவட்டச் செயலாளர் ஜெயபாலனை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று திமுக அரசை வலியுறுத்துகிறேன், இவ்வாறு அவர் கூறினார்.

# புதுச்சேரிக்கு ரெட் அலர்ட்: 60 பேர் கொண்ட இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு வருகை



புதுச்சேரி,நவ.29.- தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள டித்வா புயல் காரணமாக புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. அதையொட்டி இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு புதுச்சேரி வந்தது.

தென்மேற்கு வங்கக்கடலில் டித்வா புயல் உருவாகியுள்ளது. இந்த புயல் புதுச்சேரியை நோக்கி நகரும் என்றும் இதனால் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேசிய பேரிடர் மீட்புக்குழு அரக்கோணத்திலிருந்து புதுச்சேரிக்கு வந்துள்ளது. இக்குழுவை பார்வையிட்ட ஆட்சியர் குலோத்துங்கன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்திய வானிலை ஆய்வு மையம் புதுச்சேரிக்கு நாளை ரெட் அலர்ட் விடுத்துள்ளது. அதிக மழைப் பொழிவு இருக்கும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளோம். 60 பேர் கொண்ட இரண்டு தேசிய பேரிடர் மீட்புக்குழு வந்துள்ளது.

24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை உள்ளது. 112, 1070, 1077 கட்டணமில்லா தொலைபேசி மூலம் மக்கள் புகார்கள் தெரிவிக்கலாம். கடந்த மழையில் தண்ணீர் தேங்கிய 70 இடங்களில் பொதுப்பணித்துறை உள்ளாட்சித்துறை மூலம் தற்காலிக மோட்டார் பம்புகள் தண்ணீரை வெளியேற்ற வைத்துள்ளோம்.

ஜேசிபிகளை 46 இடங்களில் தயாராக வைத்துள்ளோம். மக்கள் தங்க 312 இடங்களில் இடங்கள் வைத்துள்ளோம். மக்களுக்கு உணவு தர ஏற்பாடு செய்துள்ளோம்.

அவசரகாலத்தில் உடன் உதவும் குழு 16 அமைத்துள்ளோம். இக்குழுவில் வருவாய்துறை, போலீஸ் உள்பட பல்வேறு துறையினர் இடம் பெற்றுள்ளனர். யாரும் மழையில் தேவையில்லாமல் வெளியே வரவேண்டாம் என மக்களுக்கு கோரியுள்ளோம்.

இடி, மின்னல் சமயங்களில் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அத்தியாவசியப் பொருட்களான ரொட்டி, பால், பிரட் போன்ற பொருட்களை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# செங்கோட்டையன் பாஜகவின் ஸ்லீப்பர் செல் அமைச்சர் ரகுபதி



சென்னை, நவ.29.- செங்கோட்டையனை பாஜகவின் ஸ்லீப்பர் செல்லாக பார்க்கிறேன்" என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று விஜய் முன்னிலையில், தவெகவில் இணைந்தார். இந்நிலையில், அமைச்சர் ரகுபதியிடம், செங்கோட்டையன் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது அவர், "என்னைப் பொறுத்தவரை செங்கோட்டையனை பாஜகவின் ஸ்லீப்பர் செல்லாக பார்க்கிறேன். அது உண்மையா என்பதை விரைவில் நிரூபிப்போம்.

அவர் அமித் ஷா அழைத்தால் ஓடுவார். இன்றும் அமித் ஷாவின் ரிமோட் கன்ட்ரோலில் ஓடிக்கொண்டிருப்பவர். தவெகவை பாஜக கூட்டணிக்கு அழைத்து வர அனுப்பப்பட்ட ஸ்லீப்பர் செல்தான் செங்கோட்டையன். அந்த அசைன்மென்டில் தான், அவர் அனுப்பப்பட்டிருப்பார் என்பது எங்களின் கருத்து.

கட்சியை விட்டு ஒரு தலைவர் வரும்போது, மற்ற கட்சிகள் அழைப்பது இயல்புதான். செங்கோட்டையன் ராஜினாமா செய்யும் முடிவுக்கு வந்தபோது, அவரை அமைச்சர் சேகர் பாபு நட்பு ரீதியில் கட்சிக்கு (திமுக) அழைத்திருக்கலாம். அவர் பாஜகவின் ஸ்லீப்பர் செல் என்பதால்தான் வரவில்லை" என்று கூறினார்.

# இந்தியா வளர்ச்சி பாதையில் செல்லும் போது உலகம் பலனடைகிறது; ராஜ்நாத் சிங்

புதுடில்லி: நவ.29- இந்திய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி பாதையில் செல்லும் போது உலகம் பல வகையில் பலனடைவதாக டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

# ரூ.95 ஆயிரத்தை நெருங்குகிறது ஒரு சவரன் தங்கம்; ஒரே நாளில் விலை ரூ.560 அதிகரிப்பு



சென்னை, நவ.29.- சென்னையில் இன்று (நவ.,28) 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.560 அதிகரித்து, ஒரு சவரன் ரூ. 94,720க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.70 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.11,840க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் தங்கம் விலையில் தொடர்ந்து ஏற்ற, இறக்க நிலை காணப்படுகிறது. தமிழகத்தில் நேற்று முன்தினம் (நவ.,26) ஆபரண தங்கம், கிராம் 11,800 ரூபாய்க்கும், சவரன், 94,400 ரூபாய்க்கும் விற்பனையானது. வெள்ளி கிராம், 176 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

நேற்று (நவ.,27) தங்கம் விலை கிராமுக்கு, 30 ரூபாய் குறைந்து, 11,770 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு, 240 ரூபாய் சரிவடைந்து, 94,160 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வெள்ளி கிராமுக்கு, நான்கு ரூபாய் உயர்ந்து, 180 ரூபாய்க்கு விற்பனையானது.

இந்நிலையில் இன்று (நவ.,28) 22 காரட் ஆபரண தங்கம் விலை சவரனுக்கு ரூ.560 அதிகரித்து, ஒரு சவரன் ரூ. 94,720க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.70 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.11,840க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஒரு சவரன் தங்கம் விலை ரூ.95 ஆயிரத்தை நெருங்கி வருகிறது. வெள்ளி விலை கிராமிற்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் ரூ.183க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# வெளிநாட்டு ஹாக்கி வீரர்களுக்காக மதுரை கீழக்கரையில் டிச.5ல் சிறப்பு ஜல்லிக்கட்டு

மதுரை, நவ.29.- மதுரை ரேஸ்கோர்ஸ் சர்வதேச ஹாக்கி விளையாட்டு மைதானத்தில் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள வெளிநாட்டு வீரர்களுக்காக மதுரை கீழக்கரை கலைஞர் ஜல்லிக்கட்டு அரங்கில் ஜல்லிக்கட்டு போட்டி டிச.5ம் தேதி நடக்கிறது.



இந்தப் போட்டியை பார்க்க வீரர்கள் மாட்டு வண்டிகளில் தமிழர் பாரம்பரிய உடைகளுடன் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் சுமார் 66.8 ஏக்கர் பரப்பளவில் கிரிக்கெட் மைதானம் போன்று முதல் முறையாக ஜல்லிக்கட்டுக்கு பிரம்மாண்ட அரங்கம் கட்டப்பட்டது.

இந்த அரங்கில் ஆண்டுதோறும் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் போட்டிகள் முடிந்த பிறகு சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்நிலையில் மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் சர்வதேச ஜூனியர் ஹாக்கி போட்டி இன்று தொடங்க உள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள வெளிநாட்டு ஹாக்கி அணி வீரர்களுக்காக, மதுரையின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த மாவட்ட நிர்வாகமும், சுற்றுலாத்துறையும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டி டிச.5ம் தேதி கீழக்கரை ஜல்லிக்கட்டு மைதானத்தில் நடக்கிறது. இதற்காக அந்த மைதானத்தை தூய்மைப்படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன.

இதுகுறித்து ஜல்லிக்கட்டு அரங்கின் மேலாளர் விக்னேஷ் கூறியதாவது: சர்வதேச ஹாக்கி வீரர்களுக்கு மதுரையின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் 50 மாடுகள் பங்கேற்கும் வகையில் ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கு காளைகளை அழைத்து வரவும், மாடுபிடி வீரர்களை ஆயத்தப்படுத்தவும் ஜல்லிக்கட்டு கமிட்டியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைதானம் சுத்தப்படுத்தும் பணி நிறைவு பெற்றதும் பொதுப்பணித்துறை மூலம் காளைகள் கொண்டுவரப்படும் இடத்தில் உள்ள உடைந்த பாதுகாப்பு கம்பிகளை சரிசெய்யும் பணி நடைபெற உள்ளது.

மாடுபிடி பகுதியில் போடப்பட்டுள்ள பழைய தேங்காய் நார் கழிவுகள் அகற்றப்பட்டு, புதிதாக போடப்படவுள்ளன. டிச.5ம் தேதி இங்கு நடக்கும் ஜல்லிக்கட்டை காண வரும் ஹாக்கி வீரர்களை வரவேற்க 15 மாட்டு வண்டிகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

ஹாக்கி வீரர்கள் நமது சிறப்பு விருந்தினர்களாக தமிழர் பாரம்பரிய உடையுடன் மாட்டு வண்டிகளில் அரங்குக்கு அழைத்து வரப்படுவர். இப்போட்டிகளை பார்க்க பொதுமக்கள் அனுமதிக்கப்படுவார்களா என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்



■ திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், செட்டிநாயக்கன்பட்டியில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு (Enumeration Form) படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து மீள பெறப்படும் பணிகளை இறுதி நாள் வரையில் காத்திருக்காமல் விரைவில் படிவத்தினை பெற்று வழங்குவது குறித்து விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். அருகில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் திரு.சா.சதீஸ்பாபு, திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் திரு.சுல்தான் சிக்கந்தர் உட்பட பலர் உள்ளர்.



■ தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 (Special Intensive Revision) தொடர்பாக தங்கள் பணியினை 100 சதவீதம் வெற்றிகரமாக நிறைவு செய்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.



■ தேனி மாவட்டம், லட்சுமிபுரத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், குழந்தைகள் விளையாட்டு அறையினை (Child Friendly Room) தேனி முதன்மை மாவட்ட நீதிபதி மாண்புமிகு திரு.சொர்ணம் ஜெ.நடராஜன் அவர்கள் மற்றும் தேனி அமர்வு நீதிபதி ஜிஅனுராதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

## மாணவியை ரயில் முன் தள்ளி கொலை செய்த இளைஞரின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைப்பு: ஐகோர்ட் தீர்ப்பு



சென்னை, நவ.29.-

பரங்கிமலை ரயில் நிலையத்தில், மாணவியை ரயில் முன் தள்ளி கொலை செய்த வழக்கில், சதீஷுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து, சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை, பரங்கிமலை, காவலர் குடியிருப்பில் வசித்த கல்லூரி மாணவியும், அதே குடியிருப்பில் வசித்த சதீஷும் காதலித்து வந்தனர். பெற்றோர் எதிர்ப்பு காரணமாக சதீஷுடன் பேசுவதை மாணவி நிறுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், கடந்த 2022ம் ஆண்டு, அக்.13ம் தேதி கல்லூரிக்கு செல்ல பரங்கிமலை ரயில் நிலையம் வந்த மாணவியை, தாம்பரம் நோக்கி சென்ற மின்சார ரயிலில் தள்ளிவிட்டு கொலை செய்ததாக சதீஷ் கைது செய்யப்பட்டார்.

சிபிசிஐடி பதிவு செய்த இந்த வழக்கை விசாரித்த சென்னை மகளிர் சிறப்பு நீதிமன்றம், சதீஷுக்கு தூக்கு தண்டனை விதித்து, 2024ம் ஆண்டு டிச.30 ம் தேதி தீர்ப்பளித்தது. மரண தண்டனையை உறுதி செய்வதற்காக வழக்கு உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சதீஷ் தரப்பிலும் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை, நீதிபதிகள் சதீஷ்குமார் மற்றும் ஜோதிராமன் அமர்வு விசாரித்தது. சதீஷ் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், "தான் காதலித்தவள் வேறொருவரை திருமணம் செய்ய ஒப்புக்கொண்ட வேதனையில் திடீரென ஆத்திரத்தில் செய்த செயல். இது ஒரு திட்டமிட்ட செயல் அல்ல. மரண தண்டனை விதிக்கத்தக்க, இது அரிதிலும் அரிதான வழக்கல்ல" என வாதிட்டார்.

சிபிசிஐடி தரப்பில் ஆஜரான தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன்முகமது ஜின்னா, "இது திடீரென ஆத்திரத்தில் செய்த செயல் அல்ல.

இது ஒரு திட்டமிட்ட செயல். 2 நாட்களாக நோட்டமிட்டு, 3வது நாள் ரயில் வரும் வரை காத்திருந்து, ரயில் அருகில் வந்தவுடன் தள்ளிவிட்டுள்ளார் என்பதற்கு கண்காணிப்பு கேமரா காட்சிகள் உள்ளிட்ட ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளதால், தண்டனையை உறுதி செய்ய வேண்டும்.

இது திடீர் தூண்டுதலாலோ, உணர்ச்சிவசப்பட்டோ நிகழ்ந்தது அல்ல. அகங்காரம், பிடிவாதம் மற்றும் ஆணாதிக்க உணர்வில் நடந்த கொடூரமான, திட்டமிட்ட செயல்.

இல்லை என சொல்வதற்கு உரிமை கொண்ட பெண், தன் எண்ணத்தை வெளிப்படுத்தும் போது அதனால் காயமடைந்த ஒரு ஆணின் அகங்காரத்தால் நடந்த கொடூரமான கொலை" என வாதிட்டார்.

அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்ததை அடுத்து, வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல், நீதிபதிகள் தள்ளி வைத்திருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிபதிகள், சதீஷுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை, ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டனர். மேலும், 20 ஆண்டுகளுக்கு எந்த தண்டனைக் குறைப்பும் வழங்கக் கூடாது எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்

# இனி பாஜகவை நம்பி புண்ணியமில்லை ஆளுக்கொரு முடிவில் அதிமுக முன்னோடிகள்



சென்னை. நவ.29.-

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் டெல்லிக்கும் சென்னைக்குமாய் பறந்து பார்த்துவிட்டு இனி எதுவும் நடக்காது என்று தெரிந்து போனதால் தவெகவில் தஞ்சம் புகுந்துவிட்டார். அடுத்ததாக ஓபிஎஸ்ஸும், "டிசம்பர் 15ல் திருப்பு முனை முடிவை எடுப்பேன்" என திகில் கிளப்பிக் கொண்டிருக்கிறார். அடுத்தவரான தினகரனும் ஜனவரியில் கூட்டணி குறித்து முடிவு என முன்னோட்டம் விட்டிருக்கிறார்.

இவர்கள் மூவருமே இதுவரைக்கும் காத்திருந்தது பாஜகவின் பதிலுக்காகத்தான். ஆனால், பழனிசாமியின் பிடிவாதத்தை மீறி பாஜகவால் இவர்களுக்கு எந்தப் பிடிமானத்தையும் கொடுக்க முடியவில்லை. அதனால் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் பயணப்பட ஆரம்பித்து விட்டார்கள்.

அதிமுகவை தங்கள் பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக முதலில் ஓபிஎஸ்ஸை வைத்து தர்மயுத்தம் நடத்த வைத்தது பாஜக. அடுத்ததாக, அண்மையில் செங்கோட்டையனை எதையோ சொல்லி சீவிவிட்டு பழனிசாமிக்கு எதிராக கெடு விதிக்க வைத்தார்கள். ஆனால், அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட பழனிசாமி யிடம் பாஜகவின் எந்தப் பாச்சாவும் பலிக்கவில்லை.

அதனால், இனிமேல் பாஜகவை நம்பிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை என்ற முடிவுக்கு வந்த தினகரனும் ஓபிஎஸ்ஸும் தேசிய ஜனநாயகக் கூட்டணியை விட்டு விலகினார்கள். கடைசியாக தேவர் ஜெயந்தியின் போது இவர்களோடு ஒன்றாக வண்டி ஏறிய செங்கோட்டையனை அதையே காரணமாக வைத்து கட்சியைவிட்டு தந்திரமாக கட்டம்கட்டினார் பழனிசாமி.

அதேசமயம், தேவரை சாட்சியாக வைத்து ஒன்று சேர்ந்த இந்த மூவரும். 'நாங்கள் ஒன்றிணைந்து விட்டோம் எங்களுக்கான வழியை நீங்கள் காட்டாவிட்டால் நாங்களாகவே சுயமாக முடிவெடுத்து எங்களுக்கான வழிகளைத் தேடிக் கொள்வோம்' என்று பாஜகவுக்கு சேதி சொன்னார்கள்.

இதனிடையே, இவர்களை தங்கள் கூட்டணிக்குள் 'தனி ஏற்பாட்டுடன்' கொண்டு வரும் திட்டம் குறித்து ஜி.கே.வாசனை பழனிசாமியின் வீட்டுக்கே அனுப்பி பேசச் சொன்னது பாஜக. அதற்கும் சேலத்திலிருந்து சரியான சிக்னல் கிடைக்காததால் மூவரும் அடுத்தகட்ட நகர்வுகளில் இறங்கிவிட்டார்கள். அதன் தொடக்கமே செங்கோட்டைன் தவெகவில் இணைந்திருப்பது.

அடுத்ததாக, 'டிசம்பர் 15' என ஓபிஎஸ் விதித்திருக்கும் கெடுவும் பாஜகவுக்கு வைக்கப்பட்ட கெடு தான். அதற்குள் எதுவும் நடக்கவில்லை என்றால், அதிமுக தொண்டர்கள் மீட்புக் 'குழு'வை 'கழகம்' ஆக்கி என்டிஏவுக்கு எதிராகவே சென்றுவிடுவோம் என்பது தான் இதன் மூலம் பாஜகவுக்கு ஓபிஎஸ் சொல்லி இருக்கும் சேதி என்கிறார்கள்.

அப்படியொரு முடிவுக்கு வரும் பட்சத்தில், தவெக அல்லது திமுக அணிக்குச் செல்லவும் ஓபிஎஸ் தயங்க மாட்டார் என்கிறார்கள். அதேசமயம், ஓபிஎஸ்ஸை முதலில் வழியனுப்பி வைத்துவிட்டு அதற்கு வரும் ரியாக்ஷன்களைப் பார்த்துவிட்டு அதற்கேற்ப முடிவுகளை எடுக்க தினகரனும் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்கிறார்

## டெல்லி காற்று மாசு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்: ராகுல் காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி: நவ.29-

டெல்லி உள்பட வட மாநிலங்களில் நிலவும் காற்று மாசு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நான் சந்திக்கும் ஒவ்வொரு தாயும் என்னிடம் ஒரே விஷயத்தைச் சொல்கிறார்கள். எனது குழந்தை நச்சுக் காற்றை சுவாசித்து வளர்கிறது, சோர்வடைகிறது, அச்சம் கொள்கிறது, கோபப்படுகிறது என்பதே அது.

மோடி அவர்களே, இந்தியக் குழந்தைகள் நம் கண் முன்பாக மூச்சுத்திணறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு அமைதியாக இருக்க முடியும்? உங்கள் அரசாங்கத்திடம் ஏன் எந்த அவசரமும் இல்லை, திட்டமும் இல்லை, பொறுப்புக்கூறல் இல்லை?

காற்று மாசுபாடு குறித்தும், இந்த அவசர நிலையை சமாளிக்க மேற்கொள்ள வேண்டிய கடுமையான செயல் திட்டம் குறித்தும் நாடாளுமன்றத்தில் உடனடியாகவும் விரிவாகவும் விவாதிக்க வேண்டியது அவசியம்.

நமது குழந்தைகளுக்கு சுத்தமான காற்று தேவை. சாக்குப்போக்குகளும் கவனத்தை திசைதிருப்பும் முயற்சிகளும் அல்ல." என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் டிச. 1ம் தேதி கூட உள்ள நிலையில் அதில் முன்னெடுக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்க காங்கிரஸ் நாடாளுமன்ற வியூகக் குழுவின் கூட்டம் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியின் டெல்லி இல்லத்தில் நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

இதனிடையே, காற்று மாசு பிரச்சினை குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள டெல்லி முன்னாள் முதல்வரும் ஆம் ஆத்மி கட்சியின் தலைவருமான அரவிந்த் கேஜ்ரிவால், "சுத்தமான காற்றும் சுத்தமான குடிநீரும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை.

டெல்லி உட்பட வட இந்தியாவில் காற்று ஆபத்தானதாக மாறிவிட்டது. இந்த விவகாரத்தில் தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம், பொதுமக்களிடம் இருந்து வரிகளை வசூலிக்கிறது.

காற்று மாசு பாதிப்பில் இருந்து தங்கள் குடும்பங்களைப் பாதுகாக்க மக்கள் காற்று சுத்திகரிப்பான்களை வாங்கச் செல்கிறார்கள். ஆனால், அரசாங்கம் அதற்கு 18% ஜிஎஸ்டி வரியைப் போட்டு பணம் பண்ணுகிறது. இது முற்றிலும் அநீதி.

காற்று மற்றும் குடிநீரை சுத்திகரிக்கும் இயந்திரங்கள் மீதான ஜிஎஸ்டியை மத்திய அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். தீர்வுகளை வழங்க முடியாவிட்டாலும், குறைந்தபட்சம் மக்களுக்கு பொருளாதார சுமையையாவது ஏற்றாமல் இருங்கள்." என தெரிவித்துள்ளார்.

இன்று காலை 8 மணி அளவில் டெல்லியில் காற்றின் தரக் குறியீடு 384 ஆக இருந்தது. நேற்று மாலை 4 மணிக்கு இது 377 ஆக இருந்தது. காற்றின் தரக்குறியீடு 0 முதல் 50 வரை இருந்தால் அது சுத்தமான காற்று, 51 முதல் 100 வரை இருந்தால் அது ஏற்றுக்கொள்ளத்தக்க நிலை. 101 முதல் 150 வரை இருந்தால் காற்று மாசு சிலருக்கு உடல்நல பாதிப்பை ஏற்படுத்தும். 151 முதல் 200 வரை இருந்தால் அனைவரின் ஆரோக்கியத்துக்கும் எதிரானது. 201 முதல் 300 வரை எனில் மிகவும் மோசம். 301க்கு மேல் எனில் சுகாதார எச்சரிக்கை நிலை என்பது குறிப்பிடத்தக்கது.

## உடுப்பி கிருஷ்ணர் மடத்தில் பிரதமர் மோடி வழிபாடு

பெங்களூரு: நவ.29-

உடுப்பியில் உள்ள ஸ்ரீ கிருஷ்ணர் மடத்தில் பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார். அவர் லட்ச காண்ட பகவத் கீதை பாராயண நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

கர்நாடகா மாநிலம் உடுப்பிக்கு பிரதமர் மோடி வருகை தந்தார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. உடுப்பி டவுனில் உள்ள பிரசித்தி பெற்ற கிருஷ்ணர் கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு நடத்தினார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பூர்ண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. மடத்தில் நடந்த லட்ச காண்ட கீதை பாராயண நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார். தொடர்ந்து, கோவில் வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு உள்ள சுவர்ண தீர்த்த மண்டபத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். ஸ்ரீபுட்டிகே மடத்தின் தலைவர் ஸ்ரீசுகுணேந்திரதீர்த்த சுவாமியை சந்தித்து ஆசி பெற்றார்.

முன்னதாக, உடுப்பி டவுனில் உள்ள நாராயணகுரு சதுக்கத்தில் இருந்து கல்சங்கா சந்திப்பு வரை பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தினார். சாலையின் இருபுறமும் நின்று பிரதமருக்கு, மக்கள், கட்சி தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## டித்வா புயல் எதிரொலி: ராமேசுவரத்தில் சூறைக்காற்றில் சிக்கி விசைப்படகு சேதம்!



ராமேசுவரம்: நவ.29-

டித்வா புயலினால் ஏற்பட்ட சூறைக்காற்றினால் ராமேசுவரம் கடலில் நிறுத்தி வைத்திருந்த விசைப்படகு தரை தட்டி சேதமடைந்தது.

தென்மேற்கு வங்கக்கடல் அதை ஒட்டிய இலங்கை கடற்கரையில் நிலவிய டித்வா புயல் வடக்கு வடமேற்கு நோக்கி நகர்ந்து, புதுச்சேரிக்கு தென்கிழக்கே 430 கி.மீ தொலைவிலும், சென்னைக்கு தெற்கே 530 கி.மீ தொலைவிலும் மையம் கொண்டுள்ளது.

இதன் காரணமாக, நாளை வட தமிழகம் கடலோர பகுதிகளில் 9 முதல் 12 அடி வரை அலைகள் உயரமாகவும், சீற்றத்துடனும் காணப்படும். காற்று மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேலும் ஓரிரு இடங்களில் அதீத கன மழைக்கு வாய்ப்புள்ளது, என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது.

முன்னதாக மீன்வளத்துறை அதிகாரிகள் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்திருந்ததால், மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடற்பகுதிகளில் ராமேசுவரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி, தங்கச்சிமடம் உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் ஐந்தாவது நாளாக கடலுக்குச் செல்லவில்லை. மேலும், பாம்பனில் நான்காம் எண் புயல் கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.

டித்வா புயல் காரணமாக ராமேசுவரம் கடலோரப் பகுதிகளில் வியாழக்கிழமை நள்ளிரவு வீசிய சூறைக்காற்று மற்றும் கடல் சீற்றம் காரணமாக ராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி விசைப்படகு ஒன்று நங்கூரம் அறுந்து சேராங்கோட்டை கடற்பகுதியில் தரை தட்டி நின்றது.

வெள்ளிக்கிழமை காலை 6 மணி நிலவரப்படி தங்கச்சிமடத்தில் 16.60 மி.மீ, பாம்பனில் 13.70 மி.மீ., , மண்டபம் 11.70 மி.மீ, ராமேசுவரம் 09.00 மி.மீ, மழையும் பதிவானது.

## டிச.20ல் தமாகாவில் இணைகிறது தமிழருவி மணியனின் காமராஜர் மக்கள் இயக்கம்!




சென்னை: நவ.29-

ஈரோட்டில் டிச.20ல் நடைபெறும் நிகழ்ச்சியில், தமிழருவி மணியனின் காமராஜர் மக்கள் இயக்கம் தமிழ் மாநில காங்கிரஸில் இணைய உள்ளதாக ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் 12ம் ஆண்டு தொடக்க விழா சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில் அக்கட்சி தலைவர் ஜி.கே. வாசன் கூறியதாவது: பெருந்தலைவர் காமராஜர் மற்றும் மூப்பனார் ஆசியோடு, தமிழ் மாநில காங்கிரஸ் 11 ஆண்டுகள் இயக்கப் பணி, மக்கள் பணி ஆற்றி 12ம் ஆண்டில் நம்பிக்கையோடு அடியெடுத்து வைக்கிறது.

காந்திய வழியில் கட்சியை நடத்தும் காமராஜர் மக்கள் இயக்கத்தின் தலைவர் தமிழருவி மணியன் தனது இயக்கத்தை தமிழ் மாநில காங்கிரஸில் இணைக்க உள்ளார். தமிழருவி மணியனை வியாழக்கிழமை (நவ.27) சந்தித்து நன்றி தெரிவித்தேன். ஈரோட்டில் டிச.20ல் காமராஜர் மக்கள் இயக்கத்தை தமிழ் மாநில காங்கிரஸில் இணைக்கிறார்.

தமிழகத்துக்கு வரும் காலம் நல்ல காலமாக, வசந்தகாலமாக இருக்க வேண்டும். நல்லவர்கள், வல்லவர்கள், ஞானமானவர்கள், ஊழல் அற்றவர்கள், வெளிப்படை தன்மையோடு செயல்படுபவர்களின் துணை அனைவருக்கும் தேவை. இதுதான் வெற்றி பெறக்கூடிய வியூகம்.

நல்லாட்சி, தூய்மையான ஆட்சிக்கு இதுபோன்ற இணைவு அவசியம். அரசியல் கட்சியினுடைய தலைவர்கள் பல்வேறு காரணங்களுக்காக, தேர்தல் வேளையில் அவர்களுக்குள் ஒரு வியூகத்தை அமைத்து, அதன் அடிப்படையில் பல முடிவுகளை எடுப்பது தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும்.

அந்த வகையில், தமிழகத்தில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தனது பொறுப்பை ராஜினாமா செய்தார். செங்கோட்டையனின் முடிவு ஏற்புடையது.

இதில் கருத்து சொல்வதற்கு ஒன்றும் இல்லை. தேசிய ஜனநாயக கூட்டணி மக்கள் விரும்பும் கூட்டணியாக உள்ளது. தேர்தல் வியூகம் அடிப்படையில் கூட்டணி வெற்றிபெற பிரகாசமாக வாய்ப்பை ஏற்படுத்துகிறோம்.

அரசின் தவறான போக்கை மக்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். அரசின் மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். அந்த தாக்கம் எதிர்மறை வாக்காக மாறும். பிஹாரில் கொடுத்த மிகப்பெரிய வெற்றியை தமிழக மக்களும் பின்பற்றும் நல்ல நிலை ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.



# சின்னாளபட்டியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது

## ஒன்றிய செயலாளர் முருகேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்

சின்னாளபட்டி, நவ.29-

சின்னாளபட்டியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது ஒன்றிய செயலாளர் முருகேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சின்னாளபட்டியில் துணைமுதல்வரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகே உள்ள கொடிக்கம்பத்தில் திமுக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சின்னாளபட்டி பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்திபாரதிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் போஸ், சின்னாளபட்டி பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் எம்.வி. முருகன், பேரூர்கழக பொறுப்புகுழு உறுப்பினர்கள் கிருஷ்ணன், நாககண்ணன், மெடிக்கல் கோபி, கீர்த்தனா, வேல்முருகன், தம்பித்துரை, முத்துவேல், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் சுப்பிரமணி, வேல்விழி, அமுல்ராஜ், லட்சுமிகுமரக்கண்ணன், ராஜசேகர், ஹேமா தம்பித்துரை, தாமரைச்செல்வி, சாந்தி செல்வி, இளைஞர் அணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், துணை அமைப்பாளர்கள் ரவிச்சந்திரன், மணிமாறன், மற்றும் திமுக வார்டு செயலாளர்கள், இளைஞரணியினர், மகளிரணியினர், திமுக சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டம் : பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமையில் நிறைவேற்றப்பட்டது

சின்னாளபட்டி, நவ.29-

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டம் பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 10 தீர்;மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற சாதாரண கூட்டம் பேரூராட்சி மன்ற தலைவர் அறையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் இளவரசி வரவேற்று பேசினார். அலுவலக பணியாளர் கலைச்செல்வி தீர்மான நகலை வாசித்தார். கூட்டத்தில் பிறப்பு இறப்பு பதிவு, வரிவசூல் நிலுவை, கசடு கழிவுநீர் மற்றும் மலகசடுகளை சேகரிப்பதற்கு ரூ.43.25லட்சம் மதிப்பில் கழிவுநீர் வாகனம் வாங்கியதற்கு மன்றத்தின் ஒப்புதல் கேட்பது, தெருநாய்களுக்கு கருத்தடை அறுவைசிகிச்சை செய்ய ஏ.பி.சி. சிகிச்சை மையம் அமைப்பது, பள்ளி மேம்பாட்டு திட்டம் 6வது நிதிக்குழு மானியம் மூலம் அரசு பள்ளிக்கான நலத்திட்ட பணிகளை செய்வது உட்பட 10 தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் திமுக வார்டு உறுப்பினர்கள் செல்வக்குமாரி, சங்கரேஸ்வரி, ஜெயக்கிருஷ்ணன், வேல்விழி, ஹேமா, தாமரைச்செல்வி, காமாட்சி, சாந்தி, ராஜாத்தி, ராசு, ரவிக்குமார், சுப்ரமணி, ராஜசேகர், அமுல்ராஜ், செல்வி உட்பட அனைத்து வார்டு உறுப்பினர்கள், சுகாதார அலுவலர் மணிகண்டன் அலுவலக பணியாளர்கள் ராமமூர்த்தி, எழுத்தர் கலைச்செல்வி உட்பட பேரூராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.




# திருச்சி மாவட்ட தொமுச பேரவை தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

திருச்சி, நவ.29-

தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வலியுறுத்தியும் மத்திய அரசை கண்டித்தும் திருச்சி மாவட்ட தொமுச பேரவை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பி.எஸ்.என்.எல். தலைமை அலுவலகம் அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தொ.மு.ச.கவுன்சில் தலைவர் குணசேகரன் தலைமை தாங்கினார். செயலாளர் ஜோசப் நெல்சன் முன்னிலை வைத்தார் பேரவை செயலாளர்கள் எத்திராஜ் தீபன் தமிழ்ச்செல்வி ஆகியோர் சிறப்புரையாற்றினர் தொமுச மாவட்ட கவுன்சில நிர்வாகிகள் இளங்கோ செல்வம் ராமலிங்கம் ஆபிரகாம் மற்றும் சேகர் அப்பாவு கனகசபை கண்ணன் முத்துக்குமார் பூபாலன் கருப்பு பாலு என்கிற தியாகராஜன் ரமேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர் தொமுச கவுன்சில் ரவீந்திரன் நன்றி கூறினார் ஆர்ப்பாட்டத்தில் தொமுச பேரவை இணைப்பு சங்கங்கள் உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர் மத்திய அரசு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# சின்னாளபட்டி மேட்டுப்பட்டி பொது மயானத்தை சீரமைக்காவிட்டால் பேரூராட்சி அலுவலகத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வோம் தேவாங்கர் மகாசபை நிர்வாகிகள் அறிவிப்பு

சின்னாளபட்டி, நவ.29-

சின்னாளபட்டி மேட்டுப்பட்டி பொது மயானத்தை சீரமைக்காவிட்டால் பேரூராட்சி அலுவலகத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்வோம் என்றும் அங்கேயே உணவு சமைத்து சாப்பிட்டு செல்வோம் என தேவாங்கர் மகாசபை நிர்வாகிகள் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து அறிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அதன்பின்னர் மேட்டுப்பட்டி தேவாங்கர் மகாசபை நிர்வாகிகள் செயல் அலுவலரிடம் மயானத்தை சீரமைக்க செயல்அலுவலர் இளவரசியிடம் மனு கொடுத்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் சுமார் 40ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இதில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காக மேட்டுப்பட்டி பகுதி மக்களுக்காக ராமநாதபுரம் செல்லும் சாலையில் ஒரு பொது மயானமும் (சுடுகாடு) கீழக்கோட்டை பகுதி மக்களுக்காக சின்னாளபட்டி பைபாஸ் சாலையில் ஓடை ஓரம் ஒரு பொது மயானமும், செக்காபட்டி பகுதி மக்களுக்காக ஆரியநல்லூர் செல்லும் வழியில் ஒரு மயானமும், தலித் சமுதாய மக்களுக்காக (அருந்ததியர்) சத்யா நகர் அருகே இரு மயானமும் உள்ளது. இதில் பொது மயானங்கள் இரண்டிலும், புல் முட்செடிகள் முளைத்து இறந்தவர்களை அடக்கம் செய்யமுடியாத நிலை உள்ளது. மேலும் கீழக்கோட்டை மற்றும் மேட்டுப்பட்டி மயானத்திலும், அருந்ததியர் சமுதாய மக்கள் மயானத்திலும் பேரூராட்சி நிர்வாகம் உரக்கிடங்கிற்கு எடுச்செல்லணே;டிய குப்பைகளை கடந்த 10 வருடங்களாக கொட்டி எரித்து வந்தனர். இந்நிலையில் பொதுமக்கள் நலன் கருதி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தனது சொந்த செலவில் செக்காபட்டி அருகே பேரூராட்சி குப்பைகளை கொட்டுவதற்கு இடவசதி செய்து கொடுத்தார். அதன்பின்னனரும் அவ்வப்போது குப்பை கழிவுகளை மேட்டுப்பட்டி மயானம் செல்லும் சாலையின் ஓரம் குவித்து வைத்து எரித்து வந்தனர். ஏற்கனவே 10 வருடங்களாக மயானத்தின் உள்ளே குழிதோன்டி குப்பைகளை குவித்திருந்ததால் 4அடி ஆழத்திற்கு குப்பை கழிவுகள் தேங்கியுள்ளன. இதுதவிர அருகில் உள்ள வடிகாலிலிருந்து கழிவு நீர்கள் மயானத்தின் உள்ளே வந்து குளம் போல் தேங்கி நின்றதால் இறந்தவர்களை அடக்கம் செய்ய குழிதோண்டினால் ஊற்றுநீர் போல் கழிவு நீர்கள் குழிக்குள் தேங்கி நின்று இறந்தவர்களை அடக்கம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பலமுறை மேட்டுப்பட்டி தேவாங்கர் மகாசபை நிர்வாகிகள் பேரூராட்சி நிர்வாகத்திடம் மேட்டுப்பட்டி பொது மயானத்தை சீரமைக்கவும், கழிவுநீரை அகற்றவும் மனுகொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இதுதவிர ஒரே ஊரில் உள்ள வேறு மயானத்திற்கு மேட்டுப்பட்டியில் இறந்தவர்களை அடக்கம் செய்ய சென்ற போது அப்பகுதியை சேர்ந்த சிலர் அடக்கம் செய்யவிடவில்லை என கூறப்படுகிறது. இதனால் மேட்டுப்பட்டி மக்கள் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது கடும் அதிருப்தி அடைந்தனர். வெள்ளிக்கிழமை காலை 11மணியளவில் மேட்டுப்பட்டி தேவாங்கர் மகாசபை தலைவர் அமுதம் ராஜேந்திரன், செயலாளர் சுப்பிரமணி, பொருளாளர் வேலுமணி தலைமையில் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டோர் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து செயல்அலுவலர் இளவரசியிடம் மேட்டுப்பட்டி பொதுமயனாத்தில் உள்ள அவல நிலையை எடுத்துகூறி வரும் புதன்கிழமைக்குள் மயானத்தை சீரமைக்காவிட்டால் மேட்டுப்பட்டி பகுதியில் யாராவது இறந்துபோனால் அவர்களின் சடலத்தை பேரூராட்சி அலுவலகத்திற்கு கொண்டு வந்து அங்குள்ள காலி யிடத்த்தில் புதைத்துவிட்டு உணவு சமைத்து இறுதி சடங்குகளை செய்வோம் என எச்சரித்ததுடன் புகார் மனுவும் கொடுத்தனர். இதுகுறித்து மேட்டுப்பட்டி தேவாங்கர் மகாசபை பொருளாளர் வேலுமணி கூறுகையில் பலமுறை நூற்றுகணக்கான மனுகொடுத்தும் பேரூராட்சி நிர்வாகம் மேட்டுபட்டி பொது மயானத்தை சீரமைக்கவில்லை அரை தோன்டினாலே கழிவுநீர் வந்துவிடுகிறது. மயானத்தை வரும் புதன்கிழமைக்குள் சீரமைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்கள் பகுதியில் இறந்தவர்களின் உடலை எடுத்து வந்து பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள காலி யிடத்தில் புதைத்துவிட்டு இறுதி சடங்குகளை செய்வோம் என கூறினார். பேரூராட்சி அலுவலகத்தில் இதனால் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.




■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சின்னஇலந்தைகுளம் கிராமத்தில் திமுக இளைஞரணி நிர்வாகி முருகேசன்(எ)கார்த்திக்,கழக மூத்த முன்னோடிகளுக்கு கட்சி வேட்டி வழங்கி இனிப்பு வழங்கி கொண்டாடினார்.



# வாடிப்பட்டியில் அதிமுக சார்பில் திண்ணைப் பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரங்களை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்

வாடிப்பட்டி. நவ.29-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் அதிமுக சார்பில் மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் புரட்சித்தலைவி அம்மா பேரவை சார்பில் மாபெரும் திண்ணை பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார், கலந்து கொண்டு பேசினார் அவர் பேசியது கடந்த கால அதிமுக ஆட்சியில் அம்மா அரசு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செய்து சாதனை படைத்தது அதேபோன்று வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராக அரியணை ஏறுவார் என்றும் அம்மா விட்டு சென்ற பணிகளை மீண்டும் துவங்கி மக்களுக்கு எண்ணற்ற சாதனைகளை நிகழ்த்துவார் என்றும் பேசினார். அதனை தொடர்ந்து துண்டு பிரசுரங்களை பொதுமக்கள் மற்றும் வணிகர்களுக்கு வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்த நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, ஒன்றிய செயலாளர்கள் காளிதாஸ், கொரியர் கணேசன், ரவிச்சந்திரன்,அரியூர் ராதாகிருஷ்ணன், மற்றும் திருமங்கலம் ராமகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசன், கருப்பையா, மாணிக்கம், மகேந்திரன், நகர செயலாளர் அசோக்குமார், மாவட்ட மகளிரணி செயலாளர் லெட்சுமி,வழக்கறிஞர் அணி ராஜ்குமார், காசிநாதன், அம்மா பேரவை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், நகரபிரதிநிதிமுரளி, மற்றும் கோட்டைமேடுபாலன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# தேனியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா : குதிரை பேரணி நடைபெற்றது

தேனி நவ.29-

தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் சார்பில் தேனியில் பல்வேறு இடங்களில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கியும் கொண்டாடி வருகின்றனர் .இதே போல் தேனி அருகே வீரபாண்டியில் வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி ஏற்பாட்டில் தேனியில் முதன்முறையாக தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பொது மக்களை கவரும் வகையில் குதிரை பேரணி நடைபெற்றது .

இந்த பேரணியானது வீரபாண்டியில் தொடங்கப்பட்டது . வீரபாண்டியில் தொடங்கிய இந்த பேரணியை வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி பங்கேற்று தொடங்கி வைத்தார்.இந்த பேரணியானது ,முத்து தேவன் பட்டி பழனிசெட்டிபட்டி ,தேனி பழைய பேருந்து நிலையம் ,பங்களா மேடு ,

என் ஆர் டி நகர், பெரியகுளம் ரயில்வே கேட் சாலை ,நகராட்சி அலுவலகம், அல்லிநகரம் ,பொம்மயைக்கவுண்டன்பட்டி ,வழியாக அன்னஞ்சி வரை சென்று மீண்டும் பைபாஸ் புதிய பேருந்து நிலையம் வழியாக அரண்மனைப்புதூர் வயல்பட்டி சத்திரப்பட்டி வழியாக வீரபாண்டியை வந்து அடைந்தது

சுமார் 30 கிலோ மீட்டருக்கு மேல் குதிரை விழிப்புணர்வு பேரணியை பல்வேறு கிராமப் பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். இந்த நிகழ்வில் திமுக பிரமுகர் சசிகுமார் வீரபாண்டி பேரூராட்சி திமுக செயலாளர் செல்வராஜ்,இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000